**O.S.No. 235/2018**

**Dated 05.06.2025**

**வா.சா.2 மாரிமுத்து**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி காளியம்மாள் எனக்கு தம்பியின் மனைவி ஆவார். வாதி அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தை பற்றி அனைத்தும் தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்னர் வழக்கு சம்பந்தமாக ஆவணங்களை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாதி காளியம்மாளுக்கு தற்போது எந்த பாத்தியதையும் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் தான் நான் குடியிருந்து வருவதற்கு எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால்? சரியல்ல. தாவா சொத்தில் தான் வாதி குடியிருந்து வருகிறார். தாவா சொத்தில் வாதி முதலில் இருந்தே தகர வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். வாதி பிரதிவாதியிடமிருந்து 2009 ம் ஆண்டு கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2009 ம் ஆண்டு வாங்கிய கிரைய பத்திரத்தை 2012 ம் ஆண்டு மேற்படி கிரையத்தை ரத்து செய்துவிட்டனர் என்றால் சரியல்ல. இன்றைய தேதிக்கு வாதி பெயரில் தீர்வை ரசீதுகள் எதுவும் இல்லை என்றாலும் பிரதிவாதி பெயரில் தான் தீர்வை ரசீது இருந்து வருகிறது என்றாலும் சரிதான். இன்றைய தேதியில் தாவா சொத்தில் கட்டிடங்களோ குடியிருப்போ கிடையாது என்றால்? சரியல்ல. பிரதிவாதிக்கு அரசாங்கத்தில் இருந்து இலவசமாக கொடுத்த வீடு தான் தாவா சொத்து என்றால் சரிதான். இலவசமாக கொடுத்த வீட்டை யாருக்கும் விற்பனை செய்ய உரிமை இல்லை என்றால்? சரிதான். பிரதிவாதிக்கு இலவச வீடு கொடுப்பதற்கு முன்பே சொந்தமாக வீடு உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இன்றைய தேதி வரையில் பிரதிவாதிக்கு இலவச வீடு கொடுத்தது தவறு என்று எங்கும் நான் புகார் அளித்தது இல்லை என்றால்? சரிதான். தாவா சொத்தை இலவசமாக பெறும் போது பிரதிவாதிக்கு எந்தவீடும் இருந்தது கிடையாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக வீடு இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

முதல் நிலை சாட்சியத்தில் பிரதிவாதி கிருஸ்துவ மதத்தை சார்ந்தவர் என்றும், இந்து என்று பொய்யாக கூறி இலவச வீடு பெற்றதாகவும் கூறியுள்ளீர்கள் அதற்கான கிருஸ்துவர் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசாங்கத்தை ஏமாற்றி தாவா சொத்தை பிரதிவாதி இலவசமாக பெற்றதாக பிரதிவாதி மீது புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால்? சரிதான். பிரதிவாதியும் அவர்களது முன்னோர்களும் காலம்காலமாக இந்து மதத்தை பின்பற்றி வாழ்ந்து வருகிறார்கள் என்றாலும் வழக்கிற்காக அவர்கள் கிருஸ்துவ மதத்தை பின்பற்றுகின்றனர் என்றுபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல. வாதியும் பிரதிவாதியும் மனமொத்து பிறப்பித்து கொண்ட 22.03.2012 தேதிய கிரைய ரத்து ஆவண எண். 1178/2012 ன் படி வாதி பெயரில் இருந்த தீர்வை ரசீதுகள் ரத்து செய்யப்பட்டுவிட்டன என்றால்? சரியல்ல. தீர்வையை ரத்து செய்யதகின் அடிப்படையில் மின் இணைப்பும் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால்? சரியல்ல. வாதி எனது தம்பியின் மனைவி என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல.

மவி இல்லை.